**DEPOSITION OF WITNESS (Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE (PCR), THANJAVUR.

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | **Case No.C.C.1/2019** |
| Sessions | : | **Prosecution. PW.1** |
| Deposition of Witness Name | : | **முகமது தௌபிக்** |
| Father's Name | : | **த/பெ. ஜமால் மைதீன்** |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed by Tmt. R. Pramila, Translator of this Court in accordance with the provisions of Oaths Act of the day of 22**.07.2019**

**முதல் விசாரணை**

நான் பொதக்குடி என்ற ஊரில் வசித்துவருகிறேன். நான் கத்தாரில் வேலை செய்துவருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. 10.1.2018 ம் தேதி பொதக்குடியில் உள்ள ஸ்போர்ட்ஸ் கிளப்பில் நான் கேரம் போர்டு விளையாடிக்கொண்டிருந்தேன். பிறகு கீழே உள்ள பாஸ்ட் புட் கடையில் ஒரே சத்தமாக கேட்டது. நான் போய் பார்த்தபோது சுமார் 20, 25 நபர்கள் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். அங்கு போய் நான் சண்டையை தடுத்த போது என்னையும் அங்கிருந்த யாரோ அடித்துவிட்டார்கள். எதிரி என்னை அடிக்கவில்லை. அதன்பிறகு என்னை கூத்தாநல்லூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச்சென்றார்கள். பிறகு திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது கூத்தாநல்லூர் போலிசார் என்னிடம் எழுதாத பேப்பரில் கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் (புகார் வாக்குமூலம்) உள்ள கையெழுத்து என்னுடையது. புகாரில் உள்ள கையெழுத்து மட்டும் அசாஆ 1. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவிக்க அனுமதிகோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

10.1.2018 ம் தேதி நான் கல்லூரிக்கு போகாமல் மதியம் 3 மணிக்கு என்னுடைய நண்பர்கள் அப்துல் ரசாக், ரியாசுதீன், மற்றும் சிலருடன் எங்கள் ஊர் மெயின் ரோட்டில் விளையாடிக்கொண்டிருந்ததாகவும், அப்போது மாலை 5.30 மணிக்கு பர்க்கத் பாஸ்ட்புட் கடையில் ஜீவா தெருவை சேர்ந்த பாண்டியராஜன், அஜய் குமார் இருவரும் தலையில் இரத்த காயத்துடன் நின்று கொண்டு சலிம் பாச்சாவை தாக்க முற்பட்டதாகவும், அப்போது போய் சமாதானம் செய்த என்னை மேற்கண்ட இருவர் மற்றும 5 நபர்கள் சேர்ந்து கொண்டு மிரட்டி, அடித்ததில் எனக்கும் காயம் ஏற்பட்டதாகவும், பிறகு நான் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது கூத்தாநல்லூர் போலிசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்ததில் நான் கையெழுத்திட்டதாகவும், தற்போது எதிரியோடு சமாதானமாக போய்விட்டேன் என்பதற்காக உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக் பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

இல்லை.

சாட்சி சொல்ல என் உத்தரவுப்படி
தட்டச்சிடப்பட்டு என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி
(கு.உ.பா.), தஞ்சாவூர்.

**DEPOSITION OF WITNESS (Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE (PCR), THANJAVUR.

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | **Case No. C.C.1/2019** |
| Sessions | : | **Prosecution. PW.2** |
| Deposition of Witness Name | : | **அப்துல் ரஜாக்** |
| Father's Name | : | **த/பெ. அப்துல் கரீம்** |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed by Tmt. R. Pramila, Translator of this Court in accordance with the provisions of Oaths Act of the day of **22.07.2019**

**முதல் விசாரணை**

நான் பொதக்குடி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் படித்து வருகிறேன். அசா 1 ஐ தெரியும். ஆஜா் எதிரியை எனக்கு தெரியாது. 10.1.2018 ம் தேதி மாலை 5.30 மணி சுமாருக்கு நான், தௌபிக், ரியாசுதீன் ஆகியோர் கேரம் போர்டு விளையாடிக்கொண்டிருந்தோம். அப்போது சலிம் பாச்சா பாஸ்ட்புட் கடையில் சத்தம் கேட்டு நாங்கள் ஓடிபோய் பார்த்தோம். அப்போது அந்த கூட்டத்தில் இருந்தவர்கள் அசா 1 ஐ தலையில் அடித்துவிட்டார்கள். அவரை யார் அடித்தது என்று கூட்டத்தில் அடையாளம் காண முடியவில்லை. நானும், காயம்பட்ட தௌபிக்கை கூத்தாநல்லூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவிக்க அனுமதிகோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

10.1.2018 ம் தேதி நான் கல்லூரிக்கு போகாமல் மதியம் 3 மணிக்கு என்னுடைய நண்பர்கள் தௌபிக், ரியாசுதீன், மற்றும் சிலருடன் எங்கள் ஊர் மெயின் ரோட்டில் விளையாடிக்கொண்டிருந்ததாகவும், அப்போது மாலை 5.30 மணிக்கு பர்க்கத் பாஸ்ட்புட் கடையில் ஜீவா தெருவை சேர்ந்த பாண்டியராஜன், அஜய் குமார் இருவரும் தலையில் இரத்த காயத்துடன் நின்று கொண்டு சலிம் பாச்சாவை தாக்க முற்பட்டதாகவும், அப்போது போய் சமாதானம் செய்த அசா1 தௌபிக்கை மேற்கண்ட இருவர் மற்றும 5 நபர்கள் சேர்ந்து கொண்டு மிரட்டி, அடித்ததில் அசா 1க்கு காயம் ஏற்பட்டதாகவும், நான் அசா1 ஐ கூத்தாநலுல்லூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய் சிகிச்சையில் சேர்த்ததாகவும், என்னை போலிசார் விசாரிக்கும் போது சொல்லிவிட்டு, தற்போது எதிரி என்னிடம் கேட்டுக்கொண்டதற்கிணஙக உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

இல்லை.

சாட்சி சொல்ல என் உத்தரவுப்படி தட்டச்சிடப்பட்டு என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி
(கு.உ.பா.), தஞ்சாவூர்.

**DEPOSITION OF WITNESS (Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE (PCR), THANJAVUR.

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | **Case No. C.C.1/2019** |
| Sessions | : | **Prosecution. PW.3** |
| Deposition of Witness Name | : | **ரியாசுதீன்** |
| Father's Name | : | **த/பெ. ஜெகவர்தீன்** |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed by Tmt. R. Pramila, Translator of this Court in accordance with the provisions of Oaths Act of the day of **22.07.2019**

**முதல் விசாரணை**

நான் பொதக்குடி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் படித்து தற்போது வேலை தேடி வருகிறேன். அசா 1 ,2 ஐ தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. 10.1.2018 ம் தேதி மாலை 5.30 மணி சுமாருக்கு நான், தௌபிக், ரசாக் ஆகியோர் கேரம் போர்டு விளையாடிக்கொண்டிருந்தோம். அப்போது பரக்கத் பாஸ்ட்புட் கடையில் சத்தம் கேட்டு நாங்கள் ஓடிபோய் பார்த்தோம். அப்போது அந்த கூட்டத்தில் இருந்தவர்கள் அசா 1 ஐ தலையில் கட்டையால் அடித்துவிட்டார்கள். அவரை யார் அடித்தது என்று கூட்டத்தில் அடையாளம் காண முடியவில்லை. நானும், ரசாக்கும் காயம்பட்ட தௌபிக்கை கூத்தாநல்லூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவிக்க அனுமதிகோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

10.1.2018 ம் தேதி நான் கல்லூரிக்கு போகாமல் மதியம் 3 மணிக்கு என்னுடைய நண்பர்கள் தௌபிக், ரசாக் மற்றும் சிலருடன் எங்கள் ஊர் மெயின் ரோட்டில் விளையாடிக்கொண்டிருந்ததாகவும், அப்போது மாலை 5.30 மணிக்கு பர்க்கத் பாஸ்ட்புட் கடையில் ஜீவா தெருவை சேர்ந்த பாண்டியராஜன், அஜய் குமார் இருவரும் தலையில் இரத்த காயத்துடன் நின்று கொண்டு சலிம் பாச்சாவை தாக்க முற்பட்டதாகவும், அப்போது போய் சமாதானம் செய்த அசா1 தௌபிக்கை மேற்கண்ட இருவர் மற்றும 5 நபர்கள் சேர்ந்து கொண்டு மிரட்டி, அடித்ததில் அசா 1க்கு காயம் ஏற்பட்டதாகவும், நான் அசா1 ஐ கூத்தாநலுல்லூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய் சிகிச்சையில் சேர்த்ததாகவும், என்னை போலிசார் விசாரிக்கும் போது சொல்லிவிட்டு, தற்போது எதிரி என்னிடம் கேட்டுக்கொண்டதற்கிணஙக உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

இல்லை.

சாட்சி சொல்ல என் உத்தரவுப்படி தட்டச்சிடப்பட்டு என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி
(கு.உ.பா.), தஞ்சாவூர்.